# ‘புற்றுநோய் குறித்து விழிப்புணர்வு அவசியம்’

சென்னை, ஆக. 12–

“புற்றுநோயாளிகளின் எண்ணிக்கை, நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இது குறித்த விழிப்புணர்வும், நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்வதும் மிகவும் அவசியம்,” என, மியாட் மருத்துவமனை நிர்வாக இணை இயக்குனர், பிரித்வி மோகன் தாஸ் கூறினார்.

சென்னை மியாட் மருத்துவமனை, இந்தோ பிரிட்டிஷ் ஹெல்த் இனிஷியேட்டிவ் மற்றும் போட்டோ வாக்கர்ஸ் சார்பில், ‘அக்கரை, ஆறுதல் மற்றும் நம்பிக்கை’ என்ற தலைப்பில், ‘கேர்வாக்’ நிகழ்ச்சி நடைபெற்றது.



சென்னை மணப்பாக்கத்தில் உள்ள மியாட் மருத்துவமனையில் இருந்து புறப்பட்ட புகைப்பட ஆர்வலர்கள்.

**வேறு நோய்கள்**

இதில், போட்டோ வாக்கர்சில் உள்ள புகைப்பட ஆர்வலர்கள், சென்னையின் வரலாற்று மற்றும் வளர்ச்சியை ஆவணப்படுத்தும் வகையில், வீதிகள் தோறும் சென்று புகைப்படம் எடுக்க உள்ளனர்.

‘கேர்வாக்’ நிகழ்ச்சியை, திரைப்பட ஒளிப்பதிவாளர் மற்றும் இயக்குனர் ராஜிவ் மேனன் துவங்கி வைத்தார்.

இது குறித்து, மியாட் மருத்துவமனை நிர்வாக இணை இயக்குனர் பிரித்வி மோகன்தாஸ் கூறியதாவது:

புற்று நோயாளிகளின் எண்ணிக்கை, நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. வேறு நோய்கள் குறித்த சோதனையின் போது தான், புற்று நோய் இருப்பது கண்டுபிடிக்கப்படுகிறது.

அப்போது, சில நபருக்கு குணப்படுத்த முடியாத முற்றிய நிலையில் காணப்படும். நோய் குறித்து விழிப்புணர்வுடன் இருப்பதும் நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்வதும் அவசியம்.

**கண்காட்சி**

புகைப்பட ஆர்வலர்கள் குழு எடுக்கும் போட்டோவில், சிறந்த, 35 படைப்புகளை ஒளிப்பதிவாளர் ராஜிவ் மேனன் தேர்வு செய்வார். அந்த, 35 படைப்புகள், அடுத்த மாதம், 6 முதல், 8ம் தேதி வரை, ஹில்டன் ஓட்டலில் விற்பனை மற்றும் கண்காட்சிக்காக வைக்கப்படும்.

மேலும், பிரிட்டிஷ் ஹெல்த் இனிஷியேட்டிவ் அமைப்பு சார்பில், 6 மற்றும் 7ம் தேதிகளில், ‘சர்வதேச இந்தோயுகே புற்றுநோய் மாநாடு’ நடைபெற உள்ளது.

இதில், நூற்றுக்கும் மேற்பட்ட மருத்துவர்கள் கலந்து கொள்ள உள்ளனர். கண்காட்சியில் கிடைக்கும் நிதி, புற்று நோய் குறித்து விழிப்புணர்வு மற்றும் பொருளாதாரத்தில் நலிவுற்ற குழந்தைகளுக்கு நிதி உதவி வழங்கி வரும், மகேஷ் நினைவு அறக்கட்டளைக்கு வழங்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

நிகழ்ச்சியில், மியாட் மருத்துவமனை நிர்வாக இயக்குனர் மோகன் தாஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.